முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்றாவது சுரங்கம் வெட்டுகின்ற பணி வருகின்ற நேரத்தில், ஏற்கனவே அந்தக் கால்வாயிலே விழுகின்ற தண்ணீரை, அந்தக் கால்வாய் பகுதியிலே அந்தச் சுரங்கம் வருகின்ற காரணத்தினாலே, சுரங்க அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு சாத்தியக் கூறுகள் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே சேத்தியாதோப்பு அணைக்கட்டு மற்றும் பல பகுதிகளுக்கு இந்த உபரி நீர் செல்கின்ற காரணத்தினால் ஏற்கனவே இருக்கின்ற பாசனப் பகுதிகளை நாம் நடைமுறைக்கு இன்றைக்கு வைத்துக் கொண்டால் போதும் என்கின்ற நிலை இருக்கிறது. மூன்றாவது சுரங்கம் வருகின்ற நேரத்தில் இந்தக் கால் வாயினுடைய கொள்ளளவும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே புதிதாக இந்தக் கால்வாயை விரிவுபடுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 157. திரு. இரா. நடேசன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

157—

திருவட்டாறில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு.

*434 திரு. இரா. நடேசன் :
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, கிராம குடிநீர்த் திட்டங்களில் பொது விநியோக இணைப்புகளுக்கு வழங்கியதுபோக, எஞ்சிய குடிநீரை வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் தற்போதைய கொள்கையின்படி கிராமக் குடிநீர்த் திட்டங்களிலிருந்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1991 அக்டோபர் 4]

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு தொகுதியிலே குலசேகரம் அருவிக்கரை போன்ற பஞ்சாயத்துக்களில் கூடுதலாக உபரி நீர் இருக்கிறது. அந்த நீரை வீடுகளுக்கு விநியோகம் செய்ய அனுமதி கேட்டபோது, கலெக்டர் அனுமதித்த போதும்கூட, அங்குள்ள செயல் பொறியாளர் அனுமதி அளிக்காமல் இருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அங்கே கூடுதலாக இருக்கின்ற தண்ணீரை விநியோகிக்க லாம் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நீர் ஆதாரங்கள் கிடைப்பதே அரிதான நிலையில் இருக்கிறது. பல்வேறு சமயங்களில் பருவமழை பொய்க்கின்ற காரணத் தினால் அந்த நீர் ஆதாரங்களிலிருந்து கொடுக்கின்ற திறன் தமிழ்நாட்டில் குறைந்துகொண்டே வருகின்றது. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டங்களிலிருந்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் பேரூராட்சியில் கூடுதலாக தண்ணீர் இருக்கிறது. உண்மையிலேயே பக்கத்து பேரூராட்சிக்குக் கூட நாங்கள் எங்களது கிணறுகளிலிருந்து அங்கே கொடுப் பதற்கு சம்மதம் சொல்லி திற்பரப்பு பேரூராட்சிக்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் தண்ணீர் மீதம் இருக்கிறது. அந்தத் தண்ணீரை உபயோகப் படுத்துவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆகையால் அந்த குலசேகரம் பேரூராட்சியிலாவது வீடுகளுக்கு இணைப்பு கொடுக்க அனுமதிப்பீர்களா ? அனுமதி கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158. திரு. வ. மு. சுப்பிரமணியன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.